2008 மார்ச் 28] [திரு. மு.க. ஸ்டாலின்]

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(முற்பகல் 10-40)

(ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

4. வரவு–செலவுத் திட்டம், 2008–2009, பொது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள், அனுமதியளித்த பிறகுதான் பேச வேண்டும். உட்காருங்கள். (குறுக்கீடு) 2008-2009 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை பொது விவாதம். பேசுவோர் பட்டியலில் மொத்தம் 18 பேர் பேச இருக்கிறார்கள். அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) எங்கே இருக்கிறார்? (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.

திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீதான பொது விவாதத்தில் பேச அனுமதி அளித்த மங்காப் புகழ் கொண்ட மாசற்ற தலைவி, உலகம் போற்றும் உன்னதத் தலைவி, உழவர் பாதுகாப்புத் திட்டம் தந்த ஒப்பற்ற தலைவி, மாற்றம் படைக்கத் துடிக்கும் மகாசக்தி, அதிசயத்தின் ஆணி வேர், தமிழகத்தின் அட்சய பாத்திரம், எங்கள் அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களில் பணிவான வணக்கங்களைச் சமர்ப்பித்து, அம்மா இருக்கும் திசை நோக்கி வணங்கி, என் உரையைத் தொடங்குகிறேன்.